**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044334

1. District / மாவட்டம்: சென்னை  PS / காவல்நிலையம்: V & AC  Year / ஆண்டு:  FIR No. / மு.த.அ. எண்: 05/AC/2022/CC-II  Date / நாள்: 18/04/2022 12.15 hrs
2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from / நாள் முதல்: 13.04.2022  Date to / நாள் வரை:
   Time Period : நேர அளவு  Time from / நேரம் முதல்: மதியம் 14மணி  Time to / நேரம் வரை:
   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 14.30 hours 13.04.2022  Time / நேரம்: 17.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 13.04.2022  Time / நேரம்: 17.30 hrs
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: கணினியில் தட்டச்சு செய்த அசல் புகார்
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 04 km தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி: Zone-14, Corporation of Chennai, Puzhuthivakkam, Chennai.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S.  District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: திரு. T. விநாயகம்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: M. தங்கராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 47 வயது  (d) Nationality : நாட்டினம்: இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்: Gas Company Loadman  (g) Address : முகவரி: No.191/YB, 4வது மெயின் ரோடு, மடிப்பாக்கம், சென்னை-91.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. முருகேசன், வரி மதிப்பீட்டாளர், மண்டலம்-14, சென்னை மாநகராட்சி
   (2) திரு. ராஜாராம், வரி வசூலிப்பாளர், மண்டலம்-14, சென்னை மாநகராட்சி புழுதிவாக்கம், சென்னை.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் K.S.நாகலட்சுமி பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T.[illegible] 13-2-22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் K.S.Nagalakshmi 18/4/2022

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18/4/2022.

Name: பெயர் K.S.NAGALAKSHMI
Rank: நிலை INSPECTOR No. எண் POLICE
V2 AC, CHENNAI CITY-II
CHENNAI-16.

....Continuation to column no.12 of FIR in Chennai, V&AC, Chennai City-II Cr.No.05/AC/2022/CC-II.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது : சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு -2-ன் காவல் ஆய்வாளர் K.S.நாகலட்சுமி ஆகிய நான் 13.04.2022-ந்தேதி மாலை 17.30 மணிக்கு அலுவகத்தில் பணியிலிருந்தபோது மடிப்பாக்கத்தை சேர்ந்த திரு.T.வினாயகம் என்பவர் அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்து கொண்டு வந்து அளித்த எழுத்துமூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை செய்து இன்று 18.04.2022-ந் தேதி காலை 12.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அவா் அளித்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநா், T.வினாயகம், த/பெ.M.தங்கராஜ், எண்.*191* YB, 4வது மெயின்ரோடு, மடிப்பாக்கம், சென்னை-91. பெறுநா், காவல் ஆய்வாளா் அவா்கள், லஞ்ச ஒழிப்பு துறை, ஆலந்தூா், சென்னை 16. ஐயா, நான் கடந்த 2007-ம் ஆண்டு சென்னை மடிப்பாக்கம், 4வது மெயின் ரோடு, சதாசிவம் நகரில் எண்.191 YB என்ற தரைதள வீட்டுடன் கூடிய 1195 சதுர மனையை எனது மனைவி திருமதி.மோகனலட்சுமி பெயரில் வாங்கினேன். அந்த வீட்டில் கடந்த 2008ல் இருந்து வசித்து வருகிறேன். அந்த வீட்டிற்கு 2014-ம் ஆண்டு வரை MPK6786 என்ற எங்களுடைய வீட்டுவரி எண்ணில் எனது மனைவி திருமதி.மோகனலட்சுமி பெயரில் முறையாக வீட்டு வரி கட்டி வந்தேன். 2015-ம் ஆண்டிற்கு வீட்டு வரி கட்ட மண்டலம் 14, புழுதிவாக்கம் நகராட்சி அலுவலகம் சென்ற போது வீட்டு வரியினை ஆன்லைன் மூலம் கட்ட வேண்டும் என்று தெரிவித்தார்கள். நான் ஆன்லைனில் எனது மனைவி பெயரில் வரி செலுத்த முயன்ற போது MPK6786 என்ற எங்களுடைய வீட்டுவரி எண்ணில் திரு.சிவகுமார் என்பவர் பெயரில் வேறு முகவரியில் உள்ள வீட்டிற்கு வரி கட்டப்பட்டிருந்தது. இது பற்றி நான் புழுதிவாக்கம் நகராட்சி அலுவலகம் சென்று வரி வசூல் செய்பவரிடம் தெரிவித்தேன். அதை சரி செய்துவிடுவதாக கூறி என்னை அனுப்பி விட்டார்கள். ஆனால் கடந்த 2017 வரை எனது மனைவி மோகனலட்சுமி பெயருக்கு வீட்டுவரியை மாற்றம் செய்து தரவில்லை. இது சம்மந்தமாக நான் பலமுறை சென்று கேட்டு பார்த்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால், கடந்த 5/4/2022 ம் தேதி பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகையில் உள்ள வருவாய் அலுவலர் அவர்களிடம் வீட்டு வரி இரசீதில் முகவரி, பெயர் மற்றும் வீட்டு வரி எண் ஆகியவற்றை மாற்றம் செய்து தர கோரி எனது மனைவி பெயரில் புகார் மனு கொடுத்தேன். வருவாய் அலுவலர் அவர்கள்

எனது புகாரினை பெற்று அதில் அவர் கையொப்பமிட்டு 5/4/2022 என்று தேதி குறிப்பிட்டு கொடுத்ததை அவரது அலுவலகத்தில் வருவாய்துறை முத்திரையினை பதிப்பித்து அந்த பக்கத்தை மட்டும் நகல் எடுத்து என்னிடம் கொடுத்து புழுதிவாக்கம் நகராட்சி அலுவலகத்தில் உதவி வருவாய் அலுவலரை சென்று பார்க்கும்படி என்னை அனுப்பி வைத்தார்கள். நான் ரிப்பன் மாளிகையில் வருவாய் அலுவலரிடம் கொடுத்த புகார் மனுவில் தேதியில் குறிப்பிட்ட ஆண்டினை பிழையாக 2021 என்று குறிப்பிட்டுவிட்டேன். அதற்கு மறுநாள் 6/4/2022 ந்தேதி நான் மண்டலம் 14, புழுதிவாக்கம் நகராட்சி அலுவலகம் சென்று விசாரித்தபோது வரி மதிப்பீட்டாளர் திரு.முருகேசன் மற்றும் வரி வசூலிப்பாளர் திரு.ராஜாராம் ஆகியோரை பார்க்க சொன்னார்கள். நானும் அன்றைய தினமே அவர்கள் இருவரையும் சென்று பார்த்தேன். வரி மதிப்பீட்டாளர் திரு.முருகேசன் அவர்கள் என்னிடமிருந்த கடிதத்தை வாங்கி பார்த்துவிட்டு மறுநாள் வந்து என்னுடைய வீட்டை வந்து பார்ப்பதாக கூறி அனுப்பிவைத்தார். அதன்படி 7/4/2022 ம் தேதி வரி மதிப்பீட்டாளர் திரு.முருகேசன் மற்றும் வரி வசூலிப்பாளர் திரு.ராஜாராம் ஆகிய இருவரும் எனது வீட்டிற்கு வந்து பார்வையிட்டு அளவீடு செய்தார்கள். அதன்பின்னர் அவர்கள் இருவரும் தனியாக சிறிது நேரம் பேசிக்கொண்டார்கள். அதன்பின்னர் வரிவசூலிப்பாளர் திரு.ராஜாராம் என்னிடம் வந்து உங்கள் வீட்டு வரியை 2020-ல் இருந்து கட்டும்படி வீட்டு வரி கணக்கு போட்டு தருகிறேன். விடுபட்ட பழைய வீட்டுவரியை கட்டவேண்டியதில்லை. ஆனால் ரூ.15,000/- பணம் எங்களுக்கு தனியா குடுத்துடுங்க என்று சொன்னார். அப்போது வரி மதிப்பீட்டாளர் திரு.முருகேசன் லேட் பண்ணாதிங்க சார், நாங்க கேட்டதை சீக்கிரம் கொடுத்துடுங்க என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்கள். அதன்பிறகு நான் மீண்டும் 13/4/2022 ம் தேதி சுமார் மதியம் 02.30 மணிக்கு மண்டலம் 14, வார்டு-188, புழுதிவாக்கம் அலுவலகம் சென்று பார்த்தபோது அங்கே வரி வசூலிப்பவர் திரு,ராஜாராம் மட்டும் இருந்தார். நான் அவரிடம் சென்று பார்த்தபோது, அவர் மோகனலட்சுமி வீடு தானே நாங்க கேட்ட பணம் கொண்டு வந்தீங்களான்னு கேட்டார். நான் கேஸ் ஏஜென்ஸில லோடுமேன் வேலைதான் செய்றேன் அவ்வளவுபணம் என்னால் கொடுக்கமுடியாது என்று சொன்னேன். நீங்க பணம் கொடுக்கலைனா வேலை நடக்காது. ஏற்கனவே லேட் ஆயிடுச்சு. உங்க வீட்டுவரி அட்ரஸ், பெயர் மற்றும் நம்பரெல்லாம் மாத்தனும் அதனால ஒரு ஆயிரம் ரூபாய் குறைச்சுக்கிட்டு

ரூ.14,000/- சீக்கிரமாக கொண்டுவந்து கொடுத்துடுங்க நான் முருகேசன் சார்கிட்ட சொல்லிக் கொள்கிறேன். உங்க வீட்டு வரி தனியா 2020ல் இருந்து கணக்கு போட்டு தந்ததும் அதை கார்ப்பரேஷனுக்கு கட்டிடுங்க, உங்க வேலையை நல்லபடியா முடிச்சி தர்றோம். திருப்தியா தாங்க என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், அரசுக்கு செலுத்தவேண்டிய வரியை ஏய்க்க விருப்பமில்லை. அதனால் நான் செலுத்தவேண்டிய வரியை கணக்கு போட்டு கொடுங்கள், நான் அதை அரசுக்கு செலுத்திவிடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் எப்படி இருந்தாலும் எங்களுக்கு தனியாக ரூ.14,000/- கொடுத்துவிடவேண்டும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியை தனியாக கட்டிவிடவேண்டும் என்று வற்புறுத்தினார். எனது மனைவி பெயரில் வீட்டுவரி ரசீது மாற்றம் செய்து தர மண்டலம் 14, வார்டு-183, புழுதிவாக்கம் அலுவலக வரி மதிப்பீட்டாளர் திரு.முருகேசன் மற்றும் வரி வசூலிப்பாளர் திரு.ராஜாராம் ஆகிய இருவருக்கும் ரூ.14,000/-ஐ லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு T.விநாயகம் 13/04/2022. Sir, Received a complaint on 13.04.2022 at 17.30 hrs. Sd (XXX) K.S.Nagalakshmi, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16. Sir, after due verification, a case was registered in V &AC, Chennai City –II, Cr.No.05/AC/2022/CC-II U/s. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 18.04.2022 at 12.15 hrs. Sd (XXX) K.S.Nagalakshmi, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16.

The original FIR along with complaint submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chengalpet and other copies submitted to officer concerned.

K.S. Nagal...
Insp-II
18/4/2022
INSPECTOR OF POLICE,
V&AC, CHENNAI CITY-II,
ALANDUR, CHENNAI-16